செய்தி வெளியீடு எண்: 62/2017 நாள் : 02.02.2018

**வேலூர் மாவட்ட பள்ளி மாணவ மாணவியருக்கு ஓர் அரிய வாய்ப்பு!**

**கலைப் போட்டிகளில் கலந்துக்கொண்டு வெற்றி பெறுவீர்!!**

தமிழ்நாடு அரசு கலை பண்பாட்டுத் துறையின் கீழ் இயங்கும் தமிழ்நாடு ஜவகர் சிறுவர் மன்றம் சார்பில் வேலூர் மாவட்டக் கலைப்போட்டிகள், ஆற்காடு நகரில் உள்ள திருமதி லட்சுமி லோகநாதன் மெட்ரிக் பள்ளி வளாகத்தில் 10.02.2018 சனிக் கிழமை அன்று நடைபெற உள்ளது. இப் போட்டிகள் காலை 10.00 மணிக்கு குரலிசை, பரத நாட்டியம், நாட்டுப்புற நடனம், ஓவியம் ஆகிய பிரிவுகளில் நடைபெறுகிறது. இப்போட்டிகள் 5 – 8, 9-12 மற்றும் 13-16 என்ற வயது பிரிவுகளில் நடைபெறும். (வயது 01.06.2017 அன்று நிலைத்தபடி 16 வயதுக்குள் இருக்க வேண்டும்)

போட்டி நடைபெறும் இடம்

திருமதி. லட்சுமி லோகநாதன் மெட்ரிக் பள்ளி,
எண். 65, தர்மராஜா கோவில் தெரு,
(திரௌபதி அம்மன் கோவில் அருகில்)
ஆற்காடு, வேலூர் மாவட்டம்.
தொலைபேசி .8973674176, 8973674178, 04172–235899

போட்டி விதிகள்

குரலிசை (வாய்ப்பாட்டு) காலை 10.00 மணி

மாணவ / மாணவியர் தனியாக குரலிசை பாட வேண்டும். ஒவ்வொருவருக்கும் அதிகபட்சமாக ஐந்து நிமிடம் அனுமதிக்கப்படும். இசையை முறையாக பயின்றவர்கள் இப்போட்டியில் பங்கேற்கலாம். போட்டியில் தமிழ் பாடல்கள் /கர்நாடக இசைப்பாடல்கள்/ தேசபக்திப்பாடல்கள் பாட வேண்டும். திரைப்படப்பாடல்கள் அனுமதியில்லை.

பரதநாட்டியப்போட்டி - காலை 10.00 மணி

பரதநாட்டியம் முறையாகப் பயில்வோர் இப் போட்டியில் பங்கேற்கலாம். முழு ஒப்பனை மற்றும் உரிய உடைகளுடன் நடனம் இருத்தல் வேண்டும். ஒவ்வொருவருக்கும் அதிகபட்சமாக ஐந்து நிமிடம் அனுமதிக்கப்படும். குழு நடனங்கள் அனுமதியில்லை. பக்க வாத்தியங்களையோ, ஒலி நாடாக்களையோ/ குறுந்தகடுகளையோ பயன்படுத்திக் கொள்ளலாம். இவற்றை போட்டியில் பங்கேற்பவர்களே அதற்கான கருவிகளை ( Smart Phone/ Mobile) ஏற்பாடு செய்துகொள்ளவேண்டும்.

நாட்டுப்புற நடனம் ( காலை 10.00 மணி)

ஒவ்வொருவருக்கும் அதிகபட்சமாக ஐந்து நிமிடம் அனுமதிக்கப்படும். முழு ஒப்பனை மற்றும் உரிய உடைகளுடன் நடனம் இருத்தல் வேண்டும். குழு நடனங்கள் அனுமதியில்லை. பக்க வாத்தியங்களையோ, ஒலி நாடாக்களையோ/ குறுந்தகடுகளையோ பயன்படுத்திக் கொள்ளலாம். இவற்றை போட்டியில் பங்கேற்பவர்களே அதற்கான கருவிகளை (Smart Phone/ Mobile) ஏற்பாடு செய்துகொள்ளவேண்டும்.

ஓவியம் ( காலை 10.00 மணி)

40 x 30 செ.மீ அளவுள்ள ஓவியத் தாள்களையே பயன்படுத்தவேண்டும். பென்சில்,கிரையான் வண்ணங்கள், போஸ்டர் கலர் , வாட்டர் கலர் பெயிண்டிங் என எவ் வகையிலும் ஓவியங்கள் அமையலாம். ஓவியத்தாள் , வண்ணங்கள், தூரிகைகள் உட்பட தங்களுக்குத் தேவையானவற்றைப் போட்டியாளர்களே கொண்டு வருதல் வேண்டும். தலைப்புகள் போட்டி தொடங்கும்போது அறிவிக்கப்படும்.

போட்டியில் கலந்துகொள்ளும் மாணவர்கள் தத்தம் பள்ளிகளிலிருந்து பிறந்த தேதி/ வயதிற்கான சான்றினை ( Bonafide Certifcate) எடுத்து வர வேண்டும். போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு விவரங்கள் தொலைபேசியில் தெரிவிக்கப்படும். மேலும் இம்மாவட்ட போட்டிகளில் முதல், இரண்டாம், மூன்றாம் பரிசு வென்றவர்களுக்கு பின்னர் நடைபெறும் விழாவில் பரிசுகள் வழங்கப்படும். இம்மாவட்ட போட்டிகளில் 9- 12, 13- 16 வயதுப் பிரிவுகளில் முதல் பரிசு பெறும் சிறார்கள் மாநில போட்டிக்கு அரசு சார்பில் அனுப்பிவைக்கப்படுவார்கள்.

| | |
|---|---|
| <u>போட்டி நடைபெறும் இடம்</u> | திருமதி. லட்சுமி லோகநாதன் மெட்ரிக் பள்ளி,<br>எண். 65, தர்மராஜா கோவில் தெரு,<br>(திரௌபதி அம்மன் கோவில் அருகில்)<br>ஆற்காடு, வேலூர் மாவட்டம்.<br>தொலைபேசி .8973674176, 8973674178, 04172–235899 |
| நாள்: | 10.02.2018 சனிக் கிழமை |

| வ.எண் | கலைப்பிரிவு | நேரம் |
|---|---|---|
| 1 | குரலிசை, பரத நாட்டியம், நாட்டுப்புற நடனம், ஓவியம் | காலை 10.00 மணி |

1 02-2-18

வேலூர்= 9.